# தமிழ் B (மேல் நிலை)
# 8614

## மதிப்பீட்டின் நோக்கங்கள்

இப்பாடம் கற்பிக்கப்படுவதன் முக்கிய நோக்கம் தமிழ் B கற்கும் மாணவர்கள் ஏற்கெனவே அடைந்துள்ள அடிப்படை மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றை வளர்த்தல் ஆகும். பின்வரும் நோக்கங்களை அடைவதற்குத் தேவையான திறன்களை மாணவர் பெற்றிருப்பர். இந்தத் திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும்.

### கேட்டல்

1 கருத்துப் பரிமாற்றச் சூழல்களில் ஒருவர் கூறுவதைச் செவிமடுத்துத் தக்கவாறு பதில் கூறுதல்.

2 எழுத்து, பேச்சு வடிவில் அமைந்த பனுவல்களைச் செவிமடுத்துப் புரிந்துகொள்ளுதல்.

### பேசுதல்

1 செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு சரியான உச்சரிப்பு, சொல்லழுத்தம், ஒலி நயம், ஏற்ற தொனி ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேச்சுத் தமிழிலோ எழுத்துத் தமிழிலோ சரளமாகவும் தெளிவாகவும் பேசுதல்.

2 தமிழில் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் சரளமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தல்.

3 அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகள் பற்றி உரையாடுதல். கொடுக்கப்படும் படத்தைப் பற்றி விவரித்தல். படத்தோடு ஓரளவு தொடர்புடைய தலைப்பில் உரையாடுதல்.

### படித்தல்

1 பல வகையான பனுவல்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய வினாக்களுக்கு விடையளித்தல்.

## எழுதுதல்

1 தம்முடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சரியாகவும் பொருத்தமாகவும் எழுதுதல்.

2 கொடுக்கப்படும் தலைப்புகளில் கட்டுரை/கதை அல்லது மின்னஞ்சல் எழுதுதல்.

## பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

1 பல்வேறு தலைப்புகளில் தம் கருத்துகளையும், உணர்வுகளையும், நோக்குகளையும் சரளமாகவும் தெளிவாகவும் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

## எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

1 கொடுக்கப்படும் மின்னஞ்சல்/வலைப்பூ தலைப்புகளில் தம்முடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சரியாகவும் பொருத்தமாகவும் எழுதுதல்.

## தேர்வு அமைப்புமுறை

இப்பாடம் மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

### வினாத்தாள் 1 : (50 நிமிடங்கள், மதிப்பளவு 20%)

### கட்டுரை

இத்தாளில் இரண்டு வினாக்கள் இடம்பெறும். ஒன்று மின்னஞ்சல்; மற்றது படத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டுரை (வலைப்பூ). இரண்டு வினாக்களுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் **'முரசு அஞ்சல்' மென்பொருளைப் பயன்படுத்தித் தங்கள் விடையைக் கணினியில் தட்டச்சு செய்ய வேண்டும்.** மின்னஞ்சலைத் தேர்ந்தெடுப்பவர்கள் அதனைக் கவனமாகப் படித்துப் பதில் அளிக்க வேண்டும். இரண்டாவது வினாவைத் தேர்ந்தெடுப்பவர்கள் கொடுக்கப்பட்ட படங்களில் ஏதேனும் ஒரு படத்தை அல்லது அதற்கு மேற்பட்ட படங்களை அடிப்படையாகக் கொண்டு வலைப்பூவில் தங்கள் கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டும்.

### வினாத்தாள் 2 : (1 மணி நேரம், மதிப்பளவு 30%)

இத்தாளில் 'அ', 'ஆ' ஆகிய பிரிவுகள் இருக்கும்.

#### 'அ' பிரிவு **(தெரிவுவிடை முன்னுணர்வுக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் 2-3 கருத்தறிதல் பகுதிகளில் பத்துக் கோடிட்ட இடங்கள் இடம்பெறும். கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குக் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

#### 'ஆ' பிரிவு (கருத்துவிளக்கப்பட / தெரிவுவிடைக் கருத்தறிதல்)

இப்பிரிவில் 3-4 கருத்தறிதல் பகுதிகள் இடம்பெறும். அவற்றுள் 1 அல்லது 2 கருத்துவிளக்கப் படக் கருத்தறிதலாக இருக்கும். இப்பிரிவில் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

## வினாத்தாள் 3 (சுமார் 15 நிமிடங்கள், மதிப்பளவு 35%)

இவ்வினாத்தாள் வாய்மொழித் தேர்வையும், கேட்டல் கருத்தறிதல் தேர்வையும் கொண்டது.

## வாய்மொழித் தேர்வு

இத்தேர்வு கீழ்க்காணும் இரண்டு கூறுகளை உள்ளடக்கியது.

வாய்மொழிப் படைப்பு (15%)

'திரைப்படக்கலை - ரசனையும் திறனாய்வும்', 'இணையமும் ஊடகங்களும்' ஆகிய இரு விருப்பப்பாடத் தலைப்புகள் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் அடிப்படையில் ஏதேனும் ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து அதையொட்டி ஒரு படைப்பை வழங்க வேண்டும். அப்படைப்பு இரண்டு நிமிடங்களுக்குள் இருக்க வேண்டும். கருத்துகளின் பொருத்தம், கருத்துகளை விவரிக்கும் திறன், படைப்பின் சரளம், மொழியின் பொருத்தப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடல் (20%)

தேர்வில் கலந்துகொள்பவருக்கு **ஓர் ஒளிக்காட்சி** காண்பிக்கப்படும். அந்த ஒளிக்காட்சி 55-60 வினாடிகளுக்குள் அமைந்திருக்கும். அதைப் பார்த்த பின்னர், அந்த ஒளிக்காட்சியை ஒட்டிய தலைப்பில் தேர்வாளரோடு கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும். கருத்துகளின் பொருத்தம், கருத்துகளை விவரிக்கும் திறன், மொழியின் பொருத்தப்பாடு, உரையாடலின் சரளம், உரையாடலில் ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

## கேட்டல் கருத்தறிதல் (சுமார் 30 நிமிடங்கள், மதிப்பளவு 15%)

செய்தி, உரையாடல், கதை, விளம்பரம், அறிவிப்பு முதலான தலைப்புகளில் 3 குறும்பனுவல்களும் 3 நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரு தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெற வேண்டும் என்கிற அவசியம் இல்லை. பனுவல்களையும் வினாக்களையும் செவிமடுத்த பின்னர் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். கேட்டல் கருத்தறிதல் தேர்வுக்குரிய நேரம் ஏறக்குறைய 30 நிமிடங்கள்.

சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் மேல் நிலைத் தேர்வு
தமிழ் B **8614**

## தேர்வு விவர அட்டவணை

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண்/ மதிப்பளவு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 1<br>(50 நிமி) | **<u>கட்டுரை</u>**<br>**<u>'அ' பிரிவு</u>**<br>நடைமுறை சார்ந்த எழுத்து (125 சொற்கள்)<br>- மின்னஞ்சல் எழுதுதல்<br>- வலைப்பூவில் பதிவு செய்தல் (இதில் படங்களும் துணைச்சொற்களும் இடம்பெறும்) | Essay | 1<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | (20/20%)<br>20/20% | கணினிவழி விடை அளித்தல். |
| 2<br>(1மணி) | **<u>கருத்தறிதல் மற்றும் மொழி மரபும் பயன்பாடும்</u>**<br>**<u>'அ' பிரிவு</u>**<br>தெரிவுவிடை முன்னுணர்வுக் கருத்தறிதல்<br>**<u>'ஆ' பிரிவு</u>**<br>கருத்துவிளக்கப்பட / தெரிவுவிடைக் கருத்தறிதல் | MCQ<br>MCQ | 10<br>10 | (30/30%)<br>10/10%<br>20/20% | |
| 3 | **<u>வாய்மொழியும் கேட்டல் கருத்தறிதலும்</u>**<br>**<u>பகுதி 1</u>**<br>வாய்மொழிப் படைப்பு<br>**<u>பகுதி 2</u>**<br>உரையாடல் (ஒளிக்காட்சி ஊக்கக்கூறையொட்டி அமைதல்) | FR | 1<br>1 | (50/50%)<br>15/15%<br>20/20% | <u>உரையாடல் -</u> ஒளிக்காட்சி (55-60 வினாடிகள்) ஊக்கக்கூறாய் பயன்படுத்தப்படும். |
| | **<u>பகுதி 3</u>**<br>கேட்டல் கருத்தறிதல் | MCQ | 10 | 15/15% | |

<u>குறிப்பு</u>:
Essay – கட்டுரை; MCQ - தெரிவுவிடை வினாக்கள்; FR – சுயவிடை வினாக்கள்